**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.250** **நாள் : 03.09.2025**

**பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மழையினால் ஏற்படும் மழைநீர்த் தேக்கத்தை தவிர்த்து மழைநீரைச் சேமித்திடும் வகையில் ரூபாய் 159.08 கோடி மதிப்பீட்டில் 70 குளங்களில் புனரமைப்புப் பணிகள் மற்றும் 88 மழைநீர் உறிஞ்சும் பூங்காக்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளபட்டுள்ளன.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் பருவமழையினை முன்னிட்டு ஆறுகள், நீர்வழிக் கால்வாய்களில் தூர்வாரி அதன் கட்டமைப்புகளை மேம்படுத்துதல், மழைநீர் வடிகால்வாய் அமைத்தல், அமைக்கப்பட்டுள்ள மழைநீர் வடிகால்வாய்களில் தூர் வாரும் பணி மேற்கொள்ளுதல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும் பெய்கின்ற மழையால் மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் மழைநீர் தேங்குவதைத் தடுத்து, மழை நீரைச் சேமித்திடும் வகையில் பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில், ஜெர்மன் தொழில்நுட்பத்தில் விளையாட்டு மைதானங்கள் பூங்காக்கள் மற்றும் பொது இடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. முக்கியமாக குளங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி அதன் கொள்ளளவை அதிகரிக்கும் பணிகளையும் மக்கள் பயன்படுத்தும் வகையில் குளத்தினைச் சுற்றி மேம்பாட்டுப் பணிகளையும் மேற்கொள்ளுதல், பூங்காக்களில் மழைநீர் உறிஞ்சும் பூங்கா கட்டமைப்புகளை உருவாக்குதல், புதிதாக குளங்களை அமைத்தல் உள்ளிட்ட பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 210 குளங்கள் இருந்த நிலையில் தற்போது, கடந்த நான்கு ஆண்டுகளில் மேலும் 41 குளங்கள் என மொத்தம் 251 குளங்கள் பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ளது. இதில் கடந்த நான்கு ஆண்டுகளில் 70 குளங்களில் ரூபாய் 144.34 கோடி மதிப்பீட்டில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இது தவிர ரூபாய் 14.74 கோடி மதிப்பீட்டில் பூங்காக்களில் தேங்கும் மழைநீரை முழுமையாகச் சேகரித்து சேமித்திடும் வகையில் 88 மழைநீர் உறிஞ்சும் பூங்காக்கள் அமைத்திடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் இந்திய சுற்றுச்சூழல் அறக்கட்டளை சார்பில் தென் சென்னை பகுதியில் 22 குளங்களில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு பணிகள் தொடங்கி நடைப்பெற்று வருகின்றன. தற்போது, மேலும் 44 குளங்களில் ரூபாய் 119.32 மதிப்பீட்டில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கிண்டி ரேஸ் கிளப் வளாகத்தில் கடந்த ஆண்டில் நான்கு புதிய குளங்கள் அமைதக்கப்பட்டது. அதன், கொள்ளளவை இந்த ஆண்டில் இரட்டிப்பாக மேற்கொள்ளுவதற்கான பணிகள் நடைபெற்றன வருகின்றன. எம்.ஆர்.டி.எஸ். பகுதியில் சிக்ஸ்வென்ட் கல்வெர்ட் அருகில் கடந்த ஆண்டில் இரண்டு குளங்கள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன.

2021ஆம் ஆண்டு முதல் புனரமைக்கப்பட்ட 70 குளங்கள்

அண்ணாநகர் மண்டலத்தில் சென்னை சீர்மிகு நகரத் திட்டத்தில் வில்லிவாக்கம் குளம், ஆசிய வளர்ச்சி வங்கி நிதியில் கடப்பாக்கம் ஏரி, நமக்கு நாமே திட்டத்தில் மணலி மண்டலத்தில் அரியலூர் குளம், கொசப்பூர் குளம், திருவொற்றியூர் மண்டலத்தில் கார்கில் நகர் குளம், சிங்கார சென்னை 2.0 திட்டத்தில் பெருங்குடி மண்டலத்தில் சட குட்டை, அண்ணாநகர் மண்டலத்தில் கங்காதீஸ்வரர் கோயில் குளம், அம்பத்தூர் மண்டலத்தில் சிவா விஷ்ணு கோயில் குளம், கங்கையம்மன் கோயில் குளம் (கபாலீஸ்வரர் நகர் குளம்), பஜனை கோயில் குளம், சோழிங்கநல்லூர் மண்டலத்தில் கணக்கம் மானிய குளம் வ.எண்.33 மற்றும் வ.எண்.35, கங்கையம்மன் கோயில் குளம், பெரியகேணி குளம், வண்ணான் கேனி மற்றும் தச்சன் கேணி குளம், வால்வெட்டி தாங்கல் குளம் வ.எண்.321 மற்றும் வ.எண்.322, அம்ருத் 2.0 திட்டத்தில் மணலி மண்டலத்தில் ஆமுல்லாவாயல் ஏரி, கொசப்பூர் குளம், மணலி ஏரி, மாதவரம் மண்டலத்தில் மாதவரம் பெரியதோப்பு ஏரி, சோழிங்கநல்லூர் மண்டலத்தில் பெரிய சத்திர குளம்,

சிங்கார சென்னை 2.0 திட்டத்தில் மணலி மண்டலத்தில் குளக்கரை, எடையன்சாவடி மற்றும் ஓமக்குளம், இராயபுரம் மண்டலத்தில் பாபா குளம், அடையாறு மண்டலத்தில் புளியக்கேணி குளம், பெருங்குடி மண்டலத்தில் கிளிஞ்சல் குளம் மற்றும் மண்டப்பா குளம், மாதவரம் மண்டலத்தில் ராமச்சந்திரா குளம், ஒத்துக்குளம், தாமரைக்குளம், சாவடி குளம், ஆவின் குளம் டீச்சர்ஸ் காலனி குளம் மற்றும் வட்டமணி குளம் பெருங்குடி மண்டலத்தில் ஒத்துக்குளம், திருவொற்றியூர் மண்டலத்தில் தாமரைக் குளம், அம்பத்தூர் மண்டலத்தில் கருப்பன் குளம் மற்றும் வைரக்குளம், ஆலந்தூர் மண்டலத்தில் வண்ணான் குளம், பெருங்குடி மண்டலத்தில் பிள்ளையார் கோயில் குளம் மற்றும் பஞ்சாயத்து பிரதான சாலை குளம், சோழிங்கநல்லூர் மண்டலத்தில் வால்வெட்டி தாங்கல் குளம், பெருமாள் கேணி குளம் மற்றும் வண்ணான் கேணி குளம்,

மூலதன நிதியில் மாதவரம் மண்டலத்தில் புறாக்குளம், தாமரைக்குளம், பச்சக்குளம், செல்லக்குளம், மூலக்குளம், பாண்டக்குளம், படவேட்டம்மண் கோயில் குளம், மாதவரம் ஏரி, ஆவின் குளம். தண்டையார்பேட்டை மண்டலத்தில் எண்ணூர் நெடுஞ்சாலையில் உள்ள குளம், அம்பத்தூர் மண்டலத்தில் அய்யன் குளம், சடாகுளம், மங்களபுரம் குளம், ரெட்டி குளம், கலைவாணர் குளம். வளசரவாக்கம் மண்டலத்தில் எஸ்.வி.எஸ் நகர் குளம், ஆலந்தூர் மண்டலத்தில் ஸ்ரீ பணிசாத்தம்மன் கோயில் குளம், அல்வான்சேரி குளம், பெருங்குடி மண்டலத்தில் அய்யன் குளம், நாசன் குளம் தண்டுக்கரை குளம், அம்மன் குளம் மற்றும் வண்ணான் குட்டை, கோடம்பாக்கம் மண்டலத்தில் வாக்ஃப் போர்டு குளம் என மொத்தம் ரூ.144.34 கோடி மதிப்பீட்டில் 70 குளங்களில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**மழைநீர் உறிஞ்சும் பூங்காக்கள்**

2022-23ஆம் ஆண்டு சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ், மணலி மண்டலம், வார்டு-15க்குட்பட்ட மணலி புதுநகர், பிளாக்-54 சி.பி.எஸ்-6, பிளாக்-29 மற்றும் 30 சி.பி.எஸ்-9, பிளாக்-65, சிபிஎஸ்-8, பிளாக்-63, சிபிஎஸ்-7, வார்டு-16க்குட்பட்ட பிளாக்-134 மற்றும் 135, சிபிஎஸ்-1 பூங்கா, பிளாக்-100 மற்றும் 101, சிபிஎஸ்-2 பூங்கா,

பிளாக்-90, சிபிஎஸ்-3 பூங்கா, வார்டு-19க்குட்பட்ட எம்.எம்.டி.ஏ. 2வது பிரதான சாலை பூங்கா, மாதவரம் மண்டலம், வார்டு-30க்குட்பட்ட செக்ரடரியேட் காலனி பூங்கா,

தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு-47க்குட்பட்ட பாரதி நகர், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்பு பூங்கா, வார்டு-36க்குட்பட்ட டி.வி.நகர், 5வது தெருவில் உள்ள பாரதி பூங்கா, வார்டு-40க்குட்பட்ட டி சுனாமி குடியிருப்பு பூங்கா பி-பிளாக், இளையா தெருவில் உள்ள இளையா பூங்கா, பிரின்ஸ் கிராமம் பேஸ்-1 மற்றும் பேஸ் 2, இராயபுரம் மண்டலம், வார்டு-51க்குட்பட்ட எம்.சி. சாலை-பேஸ்மன்ட் பூங்கா, வார்டு-58க்குட்பட்ட மை லேடிஸ் பூங்கா, ஜெர்மியா பூங்கா, வார்டு-62க்குட்பட்ட துணை மேயர் கபாலமூர்த்தி சாலையில் உள்ள மே தின பூங்கா, வார்டு-50க்குட்பட்ட வெங்கடேசன் தெருவில் உள்ள சுந்தரமூர்த்தி பூங்கா, வார்டு-61க்குட்பட்ட ருக்மணி லட்சுமிபதி சாலையில் உள்ள மேயர் சுந்தர்ராவ் பூங்கா, திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு-64க்குட்பட்ட வி.வி.நகர், வார்டு-65க்குட்பட்ட பூம்புகார் 4வது தெரு, வார்டு-68க்குட்பட்ட பெரியார் நகர் 20வது தெருவில் உள்ள பூங்கா, ஜவஹர் நகர், 5வது தெருவில் உள்ள பூங்கா, வார்டு-74க்குட்பட்ட பெரம்பூர் பிரதான சாலையில் உள்ள முரசொலிமாறன் பூங்கா,

அம்பத்தூர் மண்டலம், வார்டு-84க்குட்பட்ட கங்கையம்மன் கோயில் தெருவில் உள்ள பெரியவண்ணான் குளம், வார்டு-86க்குட்பட்ட மன்னூர்பேட்டை, மாணிக்கம் பிள்ளை தெரு, வார்டு-91க்குட்பட்ட பாபா குளம், அண்ணாநகர் மண்டலம், வார்டு-100க்குட்பட்ட ஈ.வெ.ரா. லேன், கென்சஸ் பூங்கா, வார்டு-103க்குட்பட்ட ஏ டி பிளாக் 3வது தெரு பூங்கா, வார்டு-104க்குட்பட்ட ஐ பிளாக், 38வது தெரு மற்றும் 2வது தெரு, தேனாம்பேட்டை மண்டலம், வார்டு-109க்குட்பட்ட சண்முகனார் சாலையில் உள்ள கில் நகர் பூங்கா, வார்டு-111க்குட்பட்ட நுங்கம்பாக்கம்-4வது லேன், வார்டு-122க்குட்பட்ட டர்ன்புல்ஸ் சாலை, கோடம்பாக்கம் மண்டலம், வார்டு-128க்குட்பட்ட 2வது பிரதான சாலையில் உள்ள லேம்பர்ட் நகர், வார்டு-135க்குட்பட்ட 12வது அவென்யூ பூங்கா, 14வது செக்டார்-102வது தெரு பூங்கா,

வளசரவாக்கம் மண்டலம், வார்டு-143க்குட்பட்ட வி.ஜி.என். நகர் கால்வாய் பூங்கா, வார்டு-149க்குட்பட்ட பிருந்தாவன் நகர், 5வது தெரு பூங்கா, ஆலந்தூர்

மண்டலம், வார்டு-156க்குட்பட்ட கலைமகள் நகர் பூங்கா, திருவள்ளுவர் நகர் பூங்கா, சிந்து சாலை பூங்கா, சந்தோஷ் நகர், ராமச்சந்திரன் தெரு பூங்கா, மாதா நகர்-2வது பிரதான சாலை பூங்கா, வி.என்.டி. வைகை மற்றும் மாதா தெரு-17வது தெரு பூங்கா, வார்டு-157க்குட்பட்ட சி.ஆர்.ஆர்.புரம் பூங்கா, காவ்யா கார்டன் பூங்கா, பெல்நகர் பூங்கா, மேக்ரோ மார்வல் ரிவர்வியூ கௌண்டி பூங்கா, அடையாறு மண்டலம், வார்டு-177க்குட்பட்ட வி.ஜி.பி. செல்வா நகர், 2வது பிரதான சாலை பூங்கா, வார்டு-179க்குட்பட்ட கங்கை தெரு பூங்கா, பெருங்குடி மண்டலம், வார்டு-184க்குட்பட்ட டெலிபோன் நகர் பூங்கா, வார்டு-189க்குட்பட்ட காமகோடி நகர்-முதல் பிரதான சாலை பூங்கா, சோழிங்கநல்லூர் மண்டலம், வார்டு-200க்குட்பட்ட பாரதி நகர் பிரதான சாலை மற்றும் அண்ணாசாலை-முதல் குறுக்குத் தெரு என மொத்தம் ரூ.7.67 கோடி மதிப்பீட்டில் 57 நீர் உறிஞ்சும் பூங்காக்கள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் அவர்களின் 2024-25ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி, மூலதன நிதியின் கீழ், மணலி மண்டலம், வார்டு-15க்குட்பட்ட மணலி புதுநகர் பிளாக்-26, சிபிஎஸ்-10, வார்டு-18க்குட்பட்ட சிபிசிஎல் லேஅவுட் பூங்கா, நெடுஞ்செழியன் தெரு, மாதவரம் மண்டலம், வார்டு-31க்குட்பட்ட ரங்கா அவென்யூ, தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு-47க்குட்பட்ட பாரதி நகர்-தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்பு பூங்கா, சி.பி. சாலையில் உள்ள அம்மா சுற்றுச்சூழல் பூங்கா, இராயபுரம் மண்டலம், வார்டு-53க்குட்பட்ட வடக்கு வால்டாக்ஸ் சாலையில் உள்ள மின்ட் தெரு பூங்கா, வார்டு-57க்குட்பட்ட பிரகாசம் சாலையில் உள்ள ஸ்ரீராமுலு பூங்கா, வார்டு-58க்குட்பட்ட ஈ.வி.கே. சம்பத் சாலையில் உள்ள திருமலை பூங்கா, திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு-75க்குட்பட்ட ஓட்டேரி-ஹெர்பல் பூங்கா, அம்பத்தூர் மண்டலம், வார்டு-86க்குட்பட்ட மாணிக்கம் பிள்ளை தெரு பூங்கா,

அண்ணாநகர் மண்டலம், வார்டு-99க்குட்பட்ட பி.எச். சாலையில் உள்ள நேரு பூங்கா, வார்டு-101க்குட்பட்ட 2வது அவென்யூ விரிவாக்கம்-ஜி. பிளாக் பூங்கா, வார்டு-108க்குட்பட்ட மேயர் சத்தியமூர்த்தி சாலை, தேனாம்பேட்டை மண்டலம், வார்டு-

113க்குட்பட்ட சர்மா பூங்கா, கோடம்பாக்கம் மண்டலம், வார்டு-127க்குட்பட்ட எஸ்.ஏ.எஃப். கேம்ஸ் வில்லேஜ், வார்டு-136க்குட்பட்ட சிவன் பூங்கா, வளசரவாக்கம் மண்டலம், வார்டு-143க்குட்பட்ட நொளம்பூர் பேஸ் 1, 3வது பிரதான சாலையில் உள்ள பூங்கா.

ஆலந்தூர் மண்டலம், வார்டு-167க்குட்பட்ட ஸ்டேட் பேங்க் காலனி பூங்கா, வார்டு-156க்குட்பட்ட ஸ்ரீ அம்மன் நகர், சோழிங்கநல்லூர் மண்டலம், வார்டு-196க்குட்பட்ட அன்னை இந்திரா நகர்-முதல் தெரு, வார்டு-198க்குட்பட்ட புதிய குமரன் தெரு-2வது பிரதான சாலை, வார்டு-200க்குட்பட்ட தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம்-முதல் பிரதான சாலை, வார்டு-193க்குட்பட்ட ஸ்ரீசாய் நகர்-2வது பிரதான சாலை, வார்டு-197க்குட்பட்ட வி.ஜி.பி. தெற்கு பிரதான சாலை மற்றும் பக்தி வேதாந்தா சாலை என மொத்தம் ரூ.6.34 கோடி மதிப்பீட்டில் புதிதாக 27 நீர் உறிஞ்சும் பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு-35க்குட்பட்ட முத்தமிழ் நகர்-9வது தெரு, வார்டு-37க்குட்பட்ட ஜவஹர் தெரு மற்றும் சசிரேக்கம்மா நகர், தேனாம்பேட்டை மண்டலம், வார்டு-112க்குட்பட்ட அன்பழகன் பூங்கா என மொத்தம் ரூ.72.60 இலட்சம் மதிப்பீட்டில் 4 நீர் உறிஞ்சும் பூங்காக்கள் அமைக்கப்பட்டு வருகிறது.

**புதிதாக புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ள 41 குளங்கள்**

திருவொற்றியூர் மண்டலத்தில் அன்னை சிவகாமி குளம் (எண்ணூர் விரைவுச்சாலை அருகில்), ஏ.டி. காலனி குளம், கே.எச். சாலை (இரயில்வே குளம்), அம்பேத்கர் குளம் (இரயில்வே குளம்) மணலி மண்டலத்தில் பர்மா நகர் குளம், ஆண்டார்குப்பம் மயானபூமி குளம், சடையான்குப்பம் இருளர் காலனி குளம், குளக்கரை குளம், ஏலத்தனூர் குளம், வடபெரும்பாக்கம் குளம், விநாயகபுரம் மயானபூமி குளம், வடபெரம்பாக்கம் சாமுவேல் நகர் ஏரி, கழுத்துக்குழி மயானபூமி குளம், கொசப்பூர் ஸ்ரீ வேம்புலியம்மன் கோயில் குளம், கொசப்பூர் ஸ்ரீ செல்லியம்மன் குளம், தேயம்பாக்கம் குளம், தேயம்பாக்கம் காந்தி நகர் குளம், சின்ன தோப்பு குளம்,

செட்டிமேடு அருகில் உள்ள சக்தி அம்மன் கோயில் குளம் (சன்டே சாலை), ஹரிகிருஷ்ணபுரம் குளம், மாசிலாமணி நகர் குளம், தாமரை குளம், தேவராஜன் தெரு இராமலிங்க குளம், கே.ஜி.எல். நகர் மயானபூமி குளம், ஆண்டார்குப்பம் குளம், காமராஜபுரம் குளம், அரியலூர் ஈச்சக்குளம் குளம், எம்.எப்.எல். குளம், மஞ்சம்பாக்கம் ஏரி, மஞ்சம்பாக்கம் மாத்தூர் குளம், ஆசிரியர் காலனி குளம், மாத்தூர் அத்திக்குளம் குளம்.

மாதவரம் மண்டலத்தில், பெருமாள் கோயில் தெரு குளம், பேசின் ஏரி மேம்பாடுகள், ஜெ.ஜெ. நகர் குளம், டால்கோ குளம் – மாதவரம் ரெட்ஹில்ஸ் சாலை, தண்டையார்பேட்டை மண்டலத்தில் யூனியன் கார்பைட் காலனி குளம், எண்ணூர் விரைவுச்சாலை குளம் PHASE 2, எண்ணூர் விரைவுச்சாலை குளம்-PHASE 2, எண்ணூர் விரைவுச்சாலை குளம் PHASE-2, கேனால் சாலை – பாரதி நகர் பூங்கா குளம் என மொத்தம் ரூபாய் 119.42 கோடி மதிப்பீட்டில் 41 குளங்கள் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

இவ்வாறாக குளங்கள் மேம்பாடு, மழைநீர் உறிஞ்சும் பூங்காக்கள் அமைத்தல், புதிய குளங்கள் அமைத்தல் என கடந்த நான்காண்டுகளில் ரூபாய் 159.08 கோடி மதிப்பீட்டில் 70 குளங்களில் புனரமைப்புப் பணிகள் மற்றும் 88 மழைநீர் உறிஞ்சும் பூங்காக்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் காரணமாக பருவமழைக் காலங்களில் அதிக அளவில் மழைநீரைச் சேமித்து சாலையில் மற்றும் குடியிருப்புப் பகுதிகளில் மழைநீர்த் தேக்கத்தை தவிர்ப்பதற்கும், மழைநீரை நிலத்தடியில் சேமிப்பதற்கும் மிகச் சிறப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, மக்கள் நலன் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**